427
8-

பதிவு எண் —M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு :- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-4 தருதலம், மாம்பாக்கம் ; நந்தன, சித்திரை ; 25—4—52. தளிர்-30

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## குண நிலை

பிறர்க்கென வாழ்தலே வாழ்க்கையின் முடிநிலைப் பேறு. இதுதான் கனிந்த வாழ்க்கை நிலை. இதைத்தான் குணம் என்று முன்னோர் வழங்கிவந்தனர். ஒரே கருத்தாகக் கூறினால் இம்மாதிரி கூற வேண்டும்.

இந்தப் பண்புக்கு மேற்பட்ட பண்பு, வேறொன்றுமில்லை. வேறு குணச் சிறப்புகளெல்லாம் இதனுள் அடங்கிவிடுகின்றன. அன்பு, அடக்கம், பெருமை, ஒப்புரவு, இரக்கம், வேண்டாமை முதலிய குணங்களெல்லாம் படிமுறையான பண்புகள். இவை அனைத்தும் ஒருங்கே அமைந்திருப்பவர்க்கே முற்றிலும் பிறர்க்கென வாழ்தல் இயலும். ஆதலால், பிறர்க்கென வாழும் பெரும் பண்பு ஒரு மலை போலவும், மற்றவையெல்லாம் படிகள்போன்ற அதன் பாகம் போலவும் கருதப்பட்டு வருகின்றன.

குண மலையில் ஏற விரும்புவோர் இப் படிகளெல்லாம் கடந்து, பிறர்க்கென வாழும் பெருந்தகவில் உயரவேண்டும். அங்ஙனம் குணமென்னும் குன்று ஏறி நின்றோரே பெரியோர் ஆவர்.

அத்தகைய மேலோர் தம் பொருட்டு வாழாதவராதலின், பிறர் நலத்தின் பொருட்டே, அதாவது பிறர் திருத்தத்தின் பொருட்டே, எதனையும் செய்வர்; ஒரோ ஒரு கால் கண்டிப்பதும் செய்வர்; அதற்காகச் சினக் குறிப்பும் கொள்வர்; ஆயினும், அந்தக் கோபம் அவர் உள்ளத்தில் வன்மையாய்ப் பகையாய் நிலைபெறாது. நீர் கிழிய எய்த வடுப்போலச் சீர் ஒழுகு சான்றோர் சினம் உடனே மாறிவிடும். கணமேயும் காத்தல் அரிது.

ஆனால், சான்றோர்க்கு அவ்வாறு சினம் உண்டாகும்படி மற்றவர்கள் நடந்துகொள்வது நன்றன்று. சான்றோர் என்பவர் உணர்வாற்றல் மிக்கவர். நொடி நேரமே அவர்க்கு வெகுளி நிகழ்ந்தாலும் ஆற்றலாய் அது தன் பயனை உடனே உண்டாக்கி விடும். அதன் பாய்வை ஒரு நொடி நேரங்கூடத் தடுத்து நிற்பது எவராலும் இயலாது.

குணமென்னுங் குன்றேறி
நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது.

குணம் என்னும் குன்று ஏறி நின்றார் — குணம் என்னும் மலை மேல் ஏறி அமர்ந்த பெரியோரது, வெகுளி -- கோபத்தை, கணமேயும் காத்தல் அரிது -- நொடி நேரமாயினும் அதன் பயன் விளையாதபடி தடுத்தல் அரிதாகும்.

அருமை இன்மை என்னும் கருத்தில் வந்தது; தடுத்தல் இயலாது என்றபடி.

மன வளர்ச்சி அறிவு வளர்ச்சிகளைக் கடந்து, குணவளர்ச்சிக்கு மக்கள் உயரவேண்டுமாதலின், 'குன்று ஏறி' எனவும், மேலும் உயர வேண்டும் நிலை இல்லாமையால், 'நின்றார்' எனவும் விதந்தார்.

சான்றோர்க்குப் பிறர் பொருட்டு ஒரோ ஒரு கால் தோன்றும் வெகுளியும், திருத்தம் கண்டவிடத்து உடனே மாறிவிடுதலின், அது 'கணமேயும் காத்தல் அரிது' என ஒரு கருத்தும் உணரப்படும்.

ஆற்றலுள்ள மாந்தராதலின், அவர் வெகுளியின் பயன் தடுத்தல் அரிதாயிற்று.

# "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**4-ம் ஆண்டுக் கையொப்பம்**

**(5-10-51 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

**குருகுலம், மாம்பாக்கம்,**
மதுராந்தகம் **P. O.**
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| கிளை | நந்தன, சித்திரை, | தளிர் |
|---|---|---|
| 4 | 25-4-52 வெள்ளி | 30 |


# தமிழர் அருள் - - - முயற்சிகள்

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்களின் மொழி, கலை, தொழில், அருள், பணி முதலிய எல்லாத் திறங்களும் ஒப்பற்ற நிலையினை எய்திவிட்டன என்பதனை வரலாறு, இலக்கியம், இலக்கணம் கல்வெட்டு, புதை பொருள், வாழ்க்கைமுறை, பழக்க வழக்கம் முதலிய பல வகையாலும் எடுத்துக் காட்டி நிறுவ முடியும். ஆனால் இன்று அவர்களின் நிலை என்ன? பண்டை நிலைக்கு உயர அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று பார்க்கிற முறையிலேயே தமிழர் முயற்சி என்ற தலைப்பில் அவ்வப்போது மொழி, கலை, தொழில் பற்றி எல்லாம் சிறிது சிறிது பார்த்து வருகின்றோம்.

இடைக்காலத்தே நேர்ந்த கடல்கோள், வேற்றினத்தார் வருகை, சூழ்ச்சி, அரசியல் மாற்றம், அடிமைத் தன்மை, கல்விக் குறைவு, ஒற்றுமையின்மை முதலிய பல நிலைகளால் தமிழர்களின் சிறப்பெல்லாம் மங்கி விட்டன என்றாலும், அறவே கழிந்து போயிற்று என்றோ, இனி ஏற்பட வகையில்லை என்றோ சொல்லிவிட முடியாத படி குருத்து விட்டுக்கொண்டு தான் இருக்கின்றன. அதற்குக் காரணம் அவர்கள் முன்னோர் செய்த தவமும், அதனால் அவர்கள் குருதியில் ஊறிவரும் தனிப்பட்ட ஆற்றல்களும், அவர்கள் மொழியிலும், நாட்டு மண்ணிலும், பழக்க வழக்கங்களிலும் ஊடுருவி நிற்கும் உயிர்ப்பு நிலையுமே போலும்.

அகப்புற நிலைகளில் சிறிது விழிப்பைச் செலுத்தித் தூய்மையாக நடந்து கொண்டால் போதும்; வெகு விரைவில் தமிழர்கள் தாம் மேற் கொள்ளும் எத் துறையிலும் தலைமை சான்றவர்களாக முடியும் என்று தோற்றுகிறது. இதுகாறும் தமிழர்கள் தம் மொழியிலே உரிமையும் ஒற்றுமையும் கொண்டு எவ்வாறு முயல வேண்டும் என்று ஓரளவு பார்த்தோம். இப்போது அருள் முயற்சிகள் பற்றிச் சிறிது பார்ப்போம்.

அருள் உணர்வை எழுப்பும் சான்றோர்கள் மிகுதியாகத் தோன்றிய நாடு, உலகத்திலேயே, தமிழ் நாடுதான். வரலாறும், நூல்களும் சரிவரப் போற்றப்படாத நிலையிலேயே இவ் வுண்மை ஒளிவாகப் புலப்படும்படி இருக்கிறது. தொகை தொகையாகச் சான்றோர் வாழ்ந்ததற்குச் சான்றுகள் நிரம்ப இருக்கின்றன என்றாலும் இன்று பொதுவாக உலகெங்கும், சிறப்பாகத் தமிழகத்திலும் அருள் உணர்வும் அதில் நம்பிக்கையும் மிகவும் குன்றி வருவதைப் பார்க்கின்றோம். காரணம், பொருள் நிலைகளில் தமிழர்கள் சரியான நிலையில் இல்லாதிருப்பதே எனச் சுருக்கமாகக் கூறி விடலாம். என்னை? "அருள் என்னும் அன்பீன் குழவி பொருள் என்னும் செல்வச் செவிலியால் உண்டு" என்றுதான் தமிழ் மறை முழங்குகின்றதே.

ஆகவே அரசியல் நிலை செம்மைப்பட்டு, தமிழ் நாடு உருவாகி, தமிழ் மொழி அரசு கட்டில் அமர்ந்து, பஞ்சமும் பட்டினியும், உள் வெளிப் பகைகளும் ஒழிந்து, மக்கள் வாழ்க்கை வளம் பெற்றால்தான் அருளியல் சிறக்கும் என்பதில் ஐயமில்லை. இனி, மேற் சொன்ன அடிப்படை நலங்கள் காலப் போக்கில் தெளிவில்லாத முறையில் நடைபெறும் பலவகைக் கட்சி முயற்சிகள் ஓர் ஒழுங்குபட்ட பின்பு இயல்பாக அமையுமாயினும், அதுகாறும் அங்கங்கே உள்ள மெய்யன்பர்கள் அருளியல் முயற்சிகளாகச் செய்யத்தக்கன யாவை? என்று சிலவற்றைத் தொகுத்துக் காண்போம்.

(1) நமது அறிவு இச்சை முயற்சிகளாலேயே செயல்கள் நடைபெறுகின்றன ஆயினும் உலகத்தின் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் அடிப்படையாக 'அருள்' இருக்கிறது என்கிற உண்மை உணர்வை மற்றவர்கள் கொண்டாலும் கொள்ளா விட்டாலும் முதலாவதாக அருளை விளக்கும் சமயத் துறையில்

இருப்பவர்கள் அல்லது அத் துறையைச் சீர்திருத்த விழைபவர்கள் கட்டாயம் கொள்ளவேண்டும்.

(2) மேலும் அவர்கள், உள்ளொன்று புறமொன்ருக இல்லாமல் வெளிப்படையாகக் கோலத்துக்கு ஏற்ற ஒழுக்கமும் உடையவர்களாக இருக்க வேண்டும்.

(3) 'அருள்' பொதுவானது; ஆகவே அதைத் தமக்கு எட்டிய வரையில், நிலையில் உணரும்படி செய்யும் சமயங்களும் எல்லார்க்கும் பொதுவே. எனவே அவரவர்கள் தமக்குப் புரியும் அல்லது தமக்கு நம்பிக்கை நல்கும் மதத்தவர்களாக இருக்க உரிமை தந்து, அதனுல் ஒரு வேற்றுமை மதவெறி, சமயக் காழ்ப்பு இல்லாத நிலையில் மக்கள் பழகுமாறு செய்தல் வேண்டும்.

(4) சமய நிலையங்கள், ஆட்சி முறைக்குக் குறிப்பிட்ட ஒருவர் அல்லது சிலரின் உரிமையில் இருந்தாலும், பொது நிலையம் என்று பலரும் உணரும்படி அதன் ஆட்சியும், மாட்சியும் உயர்த்தப்பட வேண்டும்.

(5) சமயம் என்பது, வெறும் சடங்கன்று, கொள்கை; உடலை மட்டும் கோலத்தால் மாற்றி ஏமாற்றம் வஞ்சனை மயக்கம் முதலியவைகட்கு இடமாயிராமல், உள் ஒளிக்கு அடையாளமாய் இருந்த உயிரையும் உணர்வையும் பற்றி ஆட்கொள்வது; ஆதலின் அதன் நிகழ்ச்சிகள் அனைத்தும் தெளிவாகத் தெரியும்படியும், உணரும்படியும் தாய்மொழியில் நடைபெற வேண்டும்.

(6) அருள், அன்பின் குழவி எனப்படுமாதலினுலும், உயர் நிலை அன்பின் வழியது ஆதலினுலும் அருள் உணர்வு பெருக அன்புணர்ச்சியும், அதன் காரணமாக ஆருயிர்ப்பணியும் சமயம் பேச்சு நிகழ்கிற இடங்களில் எல்லாம் நடைபெற வேண்டும். தமிழ் நாட்டுச் சமய நிலையங்களின் சார்பில் இந்த, இன்றியமையாத ஆருயிர்ப்பணி, மக்களின் உடலுக்கும் உயிருக்கும் நலம் செய்யத்தக்க மருத்துவம், கல்வி, கலை, தொழில் நலங்கள் மக்களுக்குக் கிட்டுவதில்லை. அதனுல்தான் உண்மைகளை அறியாமலும், மறந்தும் மறக்காவிட்டாலும், வேறு உலகியல் நலங்களை விரும்பியும் தமிழர்கள் வேற்று மதங்களைத் தழுவுகின்றனர்.

(7) அருள் பெற்ற சான்ருேர்கள் நினைவும், நூல்களின் விளக்கமும் சரியான முறையில் மக்களுக்குப் பயன்படும்படி, சமய நிலையங்களின் சார்பில் கொண்டு வரப்பட வேண்டும்.

எண்ணிப் பார்ப்பார்க்கு இன்னும் பல முயற்சிகள் தோற்றும். பிற துறை முயற்சிகளை விட அருட்டுறை முயற்சிகள் கடினமும், முதலில் தன்னையே தூய்மை செய்வதாகவும் இருத்தலின் அத் துறையில் ஈடுபட எவ்வளவோ ஆண்மையும் (தவம்— துன்பத்தைத் தாங்கும் தன்மை) ஒளியும் வேண்டியிருக்கிறது. நம்மைவிட, அருளையே நம்பி அதில் இறங்கினுல் நம் தகுதிகட்கேற்ப ஏதேனும் நன்மைகள் விளையாமற் போகாது. நம் தகுதியும் உயராமற் போகா. இது உறுதி. அருள் முயற்சிகள அருளை அடிப்படையாகக் கொண்டு தானே செய்ய வேண்டும்!

—ஆடலரசு.

---

# குருகுல வெளியீடுகள்

1. ஒளி வழிபாடு
விலை அணு 6.
2. திருமூலர் அருள்மொழிகள்
விலை அணு 4.
3. தனிகைமலை அல்லது அமைதி
விலை அணு 6.
4. திருக்கழுக்குன்றப் பதிகம்
விலை அணு 2.
5. கருக் கலை
விலை அணு 4.
6. மூன்று உண்மைகள்
விலை அணு 3.
7. இராமலிங்க அடிகள் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும்
விலை அணு 9.
8. முல்லைப்பாட்டு அகராதி
விலை அணு 8.
9. தொல்காப்பியம் அகத்திணையியல் விளக்கம்
விலை ரூ. 1.
10. ஆத்திசூடி – கருத்துரை
விலை 0-0-3.

ஷை நூறு அமைந்த கட்டு 1-2-0

**கிடைக்கும் இடம்:**

குருதலம், மாம்பாக்கம்,

மதுராந்தகம், P.O., (S. I. R.)

# சிலப்பதிகாரம்

## 27. இமயத்திற் கல்கால் கொள்வல்

— 'முத்துசாமி'

கண்ணகியும் கோவலனும் துறக்கம் எய்தினர் என்றும், அதனைக் குன்றக் குறவர்கள் பார்த்தனர் என்றுங் கண்டோம். இத்துடன் சிலப்பதிகாரக் கதை முடிவடைகிறதெனலாம். காவியத் தலைவியுந் தலைவனும் துறக்க மெய்தியது கூறிய பின்னர், மேற் கூறவேண்டியனவும் உண்டோ? ஆகவே சிலப்பதிகாரத்தில் மதுரைக் காண்டத்துடனேயே கதை முடிகிறது. எனினும், கண்ணகியை ஒரு பத்தினிக் கடவுள் என்று கருதி அவளுக்குக் கோவிலெடுத்துச் சிறப்பிக்க எண்ணிச் சேரன் செங்குட்டுவன் எடுத்துக் கொண்ட முயற்சிகளும் சிலப்பதிகாரக் கதையோடு தொடர்புடையதாகிறது. அதனை ஆசிரியர் ஒரு தனிக் காண்டமாக வைத்திருக்கிறார். அஃது வஞ்சிக் காண்டமெனப் பெறும்.

குன்றக் குறவர்கள், வேங்கை மர நிழலினின்றும் கண்ணகி கோவலனுடன் விமானமேறிச் சென்ற காட்சியைக் கண்ணுற்றுப் பெருவியப் பெய்தினர். அவளைத் தம் குல தெய்வமெனக் கருதினர். அவளைச் சிறப்பிக்கக் குரவைக் கூத்து ஆடி எத்தினர்.

மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி நிலமெனப்பெறும். அந்நிலத்துக் குரிய தெய்வம் முருகன். ஆகவே குறவர் முருக வழிபாடுடையவர். நால்வகை நிலத்திலும் குறிஞ்சி நிலத்தில் வாழும் குறவரின் பழக்க வழக்கங்கள் மிகத் தொன்மை வாய்ந்தன வென்பர். ஆகவே மிகப் பழைய காலத்திலிருந்தே முருக வழிபாடு இந்நாட்டில் உண்டென்பது போதரும்.

குறவர்கள் தம் கூத்தில் பாடிய பாடல்களில் முருகனைச் சிறப்பித்துப் பாடுதல் காணலாம். அதன் விரிவைக் குன்றக் குரவை என்னும் பகுதியிற் காண்க.

சேர நாட்டின் தலைநகரம் வஞ்சி. அந் நாட்டை அக் காலத்து அரசு செலுத்தியவன், இந்நூலைப் பாடிய இளங்கோவடிகளின் அண்ணன் செங்குட்டுவன்.

ஒரு நாள் அம் மன்னன் மலைவளங் காண விரும்பித் தன் மனைவி வேண்மாளுடன் பேராற்றங்கரையில் உள்ளதோர் குன்றில் தங்கியிருந்தனன். அருகில் குறவர்கள் நிகழ்த்திய கூத்தின் ஒலிகள் அவனுக்கு இன்பம் விளைத்தன. குறவர்கள் அரசன் வந்திருப்பதை யறிந்து மலைநாட்டிற் சிறப்பாகக் கிடைக்கக் கூடிய பொருள்களை அரசனுக்குக் கொடுத்து வாழ்த்தி வணங்கித் தாம் வேங்கை மர நிழலில் கண்ட வியத்தகு காட்சியைக் கூறி அப்பெண் எந்நாட்டினளோ எக்குலத்தவளோ அறியோம் என்று தெரிவித்தனர்.

ஆங்கு அருகிருந்த தமிழாசிரியர் சாத்தனார் என்பவர் எழுந்து, முன்னமேயே மதுராபதி யென்னுந் தெய்வம் கண்ணகிக்கு உரைத்ததையும் பிறவற்றையும் அறிந்திருந்தாரானமையின், விரித்து விளக்கினர்.

சாத்தனார் விளக்கிக் கூறிய பொழுது, பாண்டிய மன்னன் உயிர் துறந்தமைக்கு வருந்திச் செங்குட்டுவன் சில சொல்லலுற்றான். அவை ஆட்சியின் அருமையை விளக்குவனவாதலின் சிறிது பார்த்து மேற் செல்வோம்.

"வல்வினை வளைத்த
கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச்
செங்கோ லாக்கியது
மழைவளங் கரப்பின்
வான்பே ரச்சம்
பிழையுயி ரெய்திற்
பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டுங்
கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும்
நன்குடிப் பிறத்தல்
துன்பமல் லது
தொழுதக வில்........"

முன்னை வல்வினையாற் பாண்டியன் செங்கோல் கோணிற்று. அங்ஙனங் கோடிய அதனைப் பாண்டியனது உடம்பினின்றும் சென்ற உயிர் நிமிர்த்துச் செங்கோலாக்கியது. மழையாகிய வளம் கரப்பின் மிகப் பெரிய அச்சம் உண்டாம். யாதானும் ஒரு பிழையால் உயிர்கள் தீங்கு எய்

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros;**

GENERAL HARDWARE MERCHANTS

AVANASHI ROAD,
COIMBATORE.

தின் அதுவும் பெரிய அச்சமாகும். ஆகவே கொடுங்கோலுக்கு அஞ்சிக் குடிகளைக் காக்கின்றதாகிய அரசுத்தொழில் துன்பமே யல்லது போற்றத் தக்கது அன்று.

ஆட்சிப் பீடத்துக்கு ஆசைப்படுவோர் மேற்காட்டிய சிலப்பதிகாரப் பகுதியை எண்ணிப் பார்த்தல் வேண்டும். கொடுங்கோலுக்கு அஞ்சி ஆட்சி புரிவோருக் கன்றோ இவ் வச்சமெல்லாம். ஏனையோர்க்கு இவ் வச்சம் எற்றுக் கென்று எண்ணிப் போலும் தகுதியில்லாதாரும் ஆட்சிப் பீடத்துக்கு அவாவுறுகின்றனர்.

அரச பதவிக்கு வர ஆசை கொண்டிருந்த ஒருவனை அந்நாட்டு மன்னன் அழைத்துப் போய் 'இன்று முதல் நீயே அரசனாக இரு' வென்று கூறி அரியாசனத் தமர்த்த, அவனும் மகிழ்ந்து இருந்துகொண்டு சற்றே மேல் நோக்கினன். மேலே பார்த்த அவன் 'ஐயோ! அரச பதவியும் வேண்டாம்! அரியாசனமும் வேண்டாம்!' என்று அலறினான். காரணம் அவன் தலைக்கு நேராக மேலே ஒரு கூரிய வாளொன்று மெல்லிய நூலாற் கட்டப் பெற்றுத் தொங்கிக் கொண்டிருந்தது. இவ்வாறு ஒரு கதையொன்று நாட்டில் வழங்குகின்றது.

ஆகவே அரச பதவி 'தொழுதக வில்லது' என்று கூறியது எவ்வளவு உண்மையான வாக்கு! திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு சோழநாட்டை ஆண்டு வந்த மநுநீதிச் சோழனுடைய ஆட்சியில் கோல் கோடிய நிகழ்ச்சி யொன்றுண்டு. அம் மன்னனுடைய மகன் தேரூர்ந்து செல்கையில் ஒரு புனிற்றிளங் கன்று அத் தேர்க்காலில் அகப்பட்டு மாண்டது அந் நிகழ்ச்சியைக் கேள்விப்பட்ட மன்னன் கோல் கோடினமைக்கு அஞ்சிக் கழுவாய் செய்தாற் போதுமென அமைச்சர் கூறியவைகளையும் கேட்காது தருமத்தின் வழிச் செல்வது கடன் என்று தன் அருமை மகன் மார்பில் தேராழி உற ஊர்ந்தான். அங்ஙனந் தன் அருமை மகன் மார்பில் தேராழி உற ஊர்ந்த அம் மன்னனுடைய செயல் கோடிய, கோலை நிமிர்த்துச் செங்கோலாக்கியது. இறைவனும் மகிழ்ந்தான். இவ் வரலாற்றைக் கூறிய சேக்கிழார் "அருமந்த அரசாட்சி அரிதோ மற்றெளிதோதான்" என்று வியந்தமை காண்க.

பின்னர்ச் செங்குட்டுவன் தன் மனைவியை நோக்கி, 'கணவனுயிரோடு உடன் சென்ற ஒப்பற்றவளாகிய கோப்பெருந் தேவி, செற்றத்தோடு இவண் வந்து துறக்க மெய்திய கண்ணகி, இவ் விருவரில் வியக்கத்தக்கவர் யாவர்' என்று கேட்டனன்.

அதற்கு வேண்மாள், தன் கணவன் இறந்த பின்னர், தனித்து வாழுந் துன்பத்தினை யறியாது உடன் சென்ற கோப்பெருந் தேவி துறக்கத்துப் பெருந் திருவுறுக. அத் திறம் நிற்க, நம் அகன்ற நாட்டை யடைந்த பத்தினிக் கடவுளாகிய கண்ணகியைப் போற்றுதல் வேண்டும்' என்று கூறினள்.

தேவியின் கூற்றுக்கு மன்னனும் இசைந்து அமைச்சரை நோக்க, அவ்வமைச்சர் பொதிகை மலை இமய மலை இவ்விரண்டில் ஏதாவதொன்றில் கல்லெடுத்து, காவிரியிலாயினும் கங்கையிலாயினும் நீர்ப்படை செய்து கொணர்ந்து கண்ணகிக்குப் படிமம் அமைக்கலாமென்றனர்.

செங்குட்டுவன் பொதிகை மலையிற் கல்லெடுத்துக் காவிரித் துறையில் நீர்ப்படை செய்தல், "மறத்தகை நெடுவாள் எங்குடிப் பிறந்தோர்க்குச் சிறப்பொடு வரூஉம் செய்கையோ அன்று" என்று மறுத்து இமயத்திற் கல்லெடுக்க வேண்டுமென்று கூறினன்.

அவ்வாறு அரசன் கூறலும், வில்லவன் கோதை யென்னும் அமைச்சன் எழுந்து, செங்குட்டுவனுடைய முன்னைய வீரச் செயல்களை எடுத்துக் காட்டி இமய மலையினின்று கல் கொணர எண்ணின் நினைக்

நஞ்சன்கூடு பல்பொடி
பாக்டெரியாரின்
நம்பிக்கை பெற்ற
ஆயுர்வேத உதவிகள்
காஸ்மஸ்
கஸ்தூரி மாத்திரை
கர்ஜன்
கோரோஜனை மாத்திரை
பாலக்ஸ்
பேதியாக மாத்திரை
சிசுராக் குழந்தை டானிக்
பீமலெக்ஸ் டானிக்
யூடிரைல்
கர்ப்பிணிகளுக்கு
டோனடெல்
பிரஸவமானபின் டானிக்
ஹிஸ்மெனோ டானிக்
பிரதமென்ஸ்
சூதக கோளாறுகளுக்கு
யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை-1

தடுப்பார் யாருமிலர். நீ இவ்வாறு செய்தல் கற்புடைத் தெய்வத்திற்குக் கற்கால் கொளவே யாதலின் இது குறித்து அரசர் யாவர்க்கும் தமிழ்நாட்டு இலச்சினை கொண்ட ஓலையொன்று விடுத்தல் வேண்டுமென்று கூறினன்.

தமிழ் நாட்டு இலச்சினையைக் கொண்ட ஓலை விடுக்க அவ்வமைச்சன் கூறுகையில் "தென் தமிழ்நாட்டுச் செழு வில் கயல் புலி" என்று விளங்குவதால் தமிழ் நாட்டு ஓலையில் ஏனையோர்க்கு 'வில் கயல் புலி' இலச்சினை யிடுதல் கூறிய தறிக. இக் குறிப்புக் கொண்டே போலும் அனைத்திந்திய இணைப்போடு கூடிய தமிழ் மாகாணம் பிரியுங் காலத்துத் தமிழ் நாட்டுக் கொடியின் அடையாளமாக 'வில் கயல் புலி' கொள்ள எண்ணுகின்றனர். இது பண்டைய மூவேந்தர் ஆட்சியினை நினைவூட்டுவதாயிருக்குமே யன்றித் தமிழ் நாடு முழுதும் ஒன்றாகியது என்ற நினைவோடு ஆட்சி அறத்தின் அடிப்படை கொண்டது என்ற உண்மையை நினைவூட்டுவதாயிராது: ஆகவே அனைத்திந்திய இலச்சினையாகிய முச் சிங்க இலச்சினையோடு தமிழ் மாகாணத்துக்கென்று ஒரு இலச்சினை வேண்டுமாயின், பற்றற்ற தொண்டிற்கும் தூய்மைக்கும் மங்கலத்துக்கும் நாயகமாய் விளங்கும் மாட்டுச் சின்னமே மிகச் சிறந்ததாகும். தமிழர் ஆனினத்தை மிகவும் மதித்துப் போற்றுபவர் என்ற பண்பும் அதனால் விளங்கும். இக் கருத்து, நம் குருகுல ஆசிரியர்க்கும் உகந்ததாகும்.

ஓலை விடுக்க வேண்டுமென்று கூறிய அவ்வமைச்சர் கூற்றினை மறுத்து 'அழும்பில் வேள்' என்னும் அமைச்சன் 'நாம் இமையத்திலிருந்து கல் கொணரப் புறப்படுஞ் செய்தியை நம் நகரில் பறையறைவித்தாலே போதும். வஞ்சி மாநகரத்து வாயிலில் பல நாட்டு ஒற்றர்களும் இருப்பார்களாதலின் அவர்கள் மூலம் செய்தி பரவி விடும்' என்று கூறினன்.

அரசனும் அதனுக் கிசைந்து வஞ்சி மா நகர் சென்று வட நாடு செல்லுஞ் செய்தியினைப் பறையறைவிக்கச் செய்தனன்.

---

# * என் அன்பே! *

(மா. கோவிந்தராஜன்)

முதலில், நீலக் கடலை நோக்கிக் குன்றென நிற்கும் பல வண்ணக் கட்டிடங்கள், அதையொட்டி ஓடும் கருமை மிகு தார்வீதி, மேலே அதற்கு மெருகேற்றும் நீல ஒளி மணி விளக்குகள், அதனை யடுத்து அழகின் சிரிப்பாய்ப் பூத்துள்ள பல வண்ணப் பூக்கள் பொலிவுறும் பூஞ்செடிகள், அதையடுத்து இயற்கை அன்னை விரித்துள்ள மணல் மெத்தை, அதையொட்டி விரிந்து கிடக்கும் நீலக் கடல், அதில் எழுந்து ஆடும் வெள் அலைகள், அதன் எதிர்க் காட்சியாய் மேலே நிலவும் நீல வானம், அதில் தவழ்ந்துலவும் வெண் மேகம்—இவை யாவும் கண்டால் இயற்கையின் எழிலில் நீ சொக்கிப் போய் விடுவாய்.

என் அன்பே! இக் கடற் காட்சியை முழுமதி எழும் வேளையில் நீ காணவேண்டும். நீலக் கடலினின்று செக்கச் சிவந்த செம்பழமாய் எழும் முழுமதி, பின், மேலே செல்லச் செல்ல அச் செம்பழம் வெள்ளிப் பாற்குடமாய் மாறும். அதனின்று பொங்கிப் பெருகும் ஒளி வெள்ளம் இவ் வையகத்தைத் தன் மையலில் ஆழ்த்தும். அதை அள்ளிப் பருக ஆழ் கடல் தன் அலைக் கரம் நீட்டிப் பொங்கி எழும்.

இக் காட்சியினின்று உன் கண்களை மீட்டுக் கரையை நோக்கின் அங்கு அமர்ந்திருக்கும் பல் வித மக்கள் நிறைந்த கூட்டம் உன் சிந்தையைக் கவரும். அன்பு நிறைந்த குடும்பம், காதல் நிறைந்த தலைவன் தலைவிகள், அன்பு மிக்க நண்பர்கள், வயது முதிர்ந்த பெரியோர்கள், விளையாட்டுச் சிறுவர்கள் — யாவரை

---

குருகுலக் கைத்தறிகளில்
நெய்த

**மேல் குட்டைகள்**

**(டவல்கள்)**

**முறுக்கு நூலால் ஆனவை!**
**தூய்மையான சலவை!**
**கெட்டியான சாயம்!**
**அழகிய கரைகள்!**

மொத்தமாகவும் சில்லரை
யாகவும் கிடைக்கும்.

அளவுகள்: 24"X48"
26"X52"
28"X54"
30"X60"

வணிகர்க்கு
தக்க கழிவுகள் உண்டு!

குருகுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் P. O.

யும் ஒருங்கே கவர்ந்திழுக்கும் அக் கடற் கரையின் விந்தையைக் கண்டு நீ வியப்பாய். மேலும், ஓயாது பொங்கி எழும்பி வீழும் கடல் அலை போல் ஓடி ஆடி விளையாடும் சிறுவர்களின் மனதில் பாடும் மகிழ்வலைகள்; காதலர் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் இன்ப அலைகள்; சிந்தனைச் செல்வர்கள், செஞ்சொற் கவிஞர்களின் உள்ளத்தில் பிறக்கும் கருத்தலைகள்; வாழ்விலே தாழ்வுற்றோர், துயருற்றோர் மனதில் உழலும் துன்ப அலைகள் — இவை யாவுக்கும் எதிரொலியாய், யாவர் மனநிலைக்கும் ஒக்க அலை யெழுப்பி இசை முழக்குகிறது அவ் வண் கடல்.

கடல் மங்கை தரும் எழில் மயக்கத்தினின்று மீண்டு திருவல்லிக் கேணி செல்வோம். அங்கேயுள்ள பழம் பெருமை கொண்ட பார்த்தசாரதி கோயிலைத் தவிர, பார்க்க வேண்டிய இடம் வேறொன்றுமில்லை. ஆயினும் இவ் வூருக்கு ஏற்பட்டுள்ள பெயரின் அழகைக் கவனி. அழகிய அல்லி மலர்கள் நிறைந்து வனப்புப் பெற்ற தடாகங்களால் வளம் பெற்ற ஊர் எனும் பொருள்படும் திருவல்லிக் கேணி எனும் பெயர் எத்தகைய அழகிய பெயர்! அச் சொல்லிலே பண்டைய தமிழனின் கற்பனை உள்ளத்தையும், அழகுணர்ச்சியையும், ஊர்களுக்குப் பெயரிடுவதிலும் தன் கவிதைத் திறனைக் காட்டும் உயர்வையும் காண்கிறோம். இத்தகைய கவிதை நிரம்பிய மற்றொரு பெயர் கொண்டு விளங்கும் ஊரும் அருகிலுள்ளது. அதுதான் மயிலாப்பூர் எனப்படும் இடம். கவிதை பேசும், கற்பனை செறிந்த இப் பெயரை நினைத்த அளவிலே நம் உள்ளத்தில் கற்பனைக் காட்சிகள் பல எழுகின்றன. பசுமை மிகுந்த சோலையும், அதிலே எழில் மிகுந்த மயில்களும், அவை வானிலே மூண்டெழும் கார் முகில் கண்டு, தம் பசுந் தோகை விரித்து, களி கொண்டு நடமிட்டு ஆர்ப்பரிக்கும் காட்சியும் நம் உள்ளத்தில் எழுகின்றன.

இவ்வழகிய பெயரைப் பெற்ற பெருமையோடு, தமிழை உலக மொழிகளின் அரங்கிலே ஏற்றுவித்த திருவள்ளுவரைப் பெற்றெடுத்த பெருமையும் கொண்டது இவ்வூர். இதன் அடையாளமாக, அவர் பிறந்த இடத்திலேயே அப் பெருந் தகைக்குக் கோயிலொன்றும் தோன்றியுள்ளது.

ஊனக் கண் இழந்தோர்க்கு அறிவுக்கண் அளிக்கும் கல்வி நிலையம் ஒன்றும் இங்கேயுள்ளது. அங்கிருந்து கடற்கரை நோக்கிச் சென்றால் வழியில் விஜிலன்ஸ் ஹோம் எனப்படும் அனாதை விடுதியொன்றைக் காணலாம். வாழ்க்கைப் படியினின்றும் வழுக்கி விழுந்து, அழிவுச் சுழலில் அகப்பட்டுத் தத்தளிக்கும் பெண்களைக் கரை சேர்க்கும் தோணிபோல் இந்நிலையம் உதவுகின்றது.

அடுத்தாற் போல் கடற்கரையை அடைந்தால் நெடிதுயர்ந்த கோபுரத்துடன் விளங்கும் சர்ச் ஒன்றைக் காணலாம். செயிண்ட் தோம் எனும் மகானின் நினைவாய்ப் போர்ச்சுக்கீசியர்களால் கட்டப்பட்ட இந்தச் சர்ச் போர்ச்சுக்கீசியர்களின் சிற்ப வேலைப்பாடு மிகுந்து கம்பீரம் நிறைந்த அழகுடன் விளங்குகிறது.

இனி அடுத்தபடியாக நீ காண வேண்டிய இடம் அடையாறு. செயற்கை அழகு மிகுந்து விளங்கும் இச் சென்னையிலே, இயற்கை அன்னை தன் எழில் தோன்ற விளங்குவது அடையாற்றிலேதான். அடையாறு என்னும் நதி கடலில் கலக்கும் இடத்திலே, அந் நதியையும், கடலையும் தன் இரு எல்லைகளாகக் கொண்டு விளங்கும் தியசாபிகள் சங்கத்தையும், அதைச் சூழ்ந்து நிலவும் மாபெரும் சோலையையும் எண்ணும்பொழுதே உள்ளத்தில் இன்பத் தென்றல் வீசுகிறது. இயற்கையன்னையின் இன்ப மாளிகையெனத் திகழும் அச் சோலையினுள்ளே நுழையும் பொழுதே நம் உள்ளக் கடலில் இன்ப அலைகள் எழுகின்றன.

PHONE 55034 TEL ENKAYAM
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள்
கிஸான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
சென்னை 1.

# * இயற்கைக் காட்சிகள் *

(M. K. சாமி)

மலையில் அங்கங்கும், மரங்களிலும் ஞாயிற்றைப் போல் வட்ட வடிவமாகத் தொடுக்கப் பட்டுள்ள தேனடைகள் பல சிதைந்து விழுகின்றன அந்த அருவியிலே. இயற்கையாகவே சுவையுள்ள அருவி நீர் தேன் கலந்த பிறகு எவ்வாறு இனிக்கும் என்று சொல்லத் தேவையில்லை. இது மட்டுமா? இன்னும், பலாச் சுளைகள், வாழைப் பழங்கள், இள நீர்க் காய்கள் இவைகளெல்லாம் மரங்களி லிருந்து சிதறி, அருவியில் விழுந்து கலக்கின்றன. பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போல, இத் தீங் கனிகள் அருவியில் விழுந்த பின் அவ்வருவி நீரைத் "தேவாமிர்தம்" என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்வது? பின்னும் அந்த அருவியில் கரிய மிளகின் கொத்துக்கள் வேறே விழுந்து அந் நீரைக் "காய கற்பம்" என்னும் மருந்துமாய் ஆக்கிவிடுகின்றன.

இந்த அருவி நீரைப் பருகுவதற்காகத்தான் குரங்கினங் களும், வேறு பல விலங்குகளும், பறவைகளும் அருவியை நாடி வருகின்றன. அருவியை அணுகியவுடன் குரங்குகள் குளிரால் நடுங்குகின்றன. அருவி வரும் வேகத்தையும், அது கொண்டு வரும் மரக் கட்டைகளையும் பார்த்துத் தம்மைத் தாக்குவதற்காக ஒரு சேனையே படைக்கலங் களைக் கொண்டு வருகிறதோ என்று பயந்து சில விலங்குகளும் மயில், கோழி முதலிய பறவைகளும் அஞ்சி ஓடுகின்றன. பனைமரத்தின் பட்டைகள் போன்று உடம்பில் கரிய மயிர் செறிந்துள்ளனவும், வளைந்த அடியை யுடையனவுமாகிய கரடிகளும் பன்றிகளும் வெருவி ஓடிக் கற் பிளவுகளில் ஒளிந்து கொள்ளுகின்றன. காட்டுப் பசுக்கள், பயத்தால் கத்தத் தொடங்குகின்றன. பெண் யானைகள் மட்டும் கரையோரத்தில் குளிர் காற்று வாங்கிக் கொண்டு நிற்கின்றன.

முத்தி வேண்டியோ என்னவோ, அந்த மலைப் பக்கங்களில் இறந்துபட்ட விலங்கு முதலியவற்றின் எலும்புகள் அந்த அருவியில் இடப்பட்டு விடுகின்றன. அவைகளில் யானைக் கொம்புகளும் இருக்கின்றன. அக் கொம்புகளை உடைத்து அவற்றிலுள்ள முத்துக்களை எடுத்து நன்றாகக் கழுவி அவற்றின் நிறம் ஒளிருப்படியும், பாறைகளின் அடியில் மண்ணில் புதைந்து கிடக்கும் பொற் கட்டிகளைத் தோண்டி எடுத்து மண் போகக் கழுவி அவைகளின் நிறமும் விளக்கமாக மின்னும்படியும், அவற்றைத் தூக்கிக் காட்டிக் கொண்டு தன்னிடம் இவ்வளவு செல்வம் இருக்கிறதென்று புலப்படும்படி பெருமிதத்தோடும், உடல் பூரிப்போடும் குதித்துக் கொண்டு வருகிறது வளமிக்க அவ்வருவி, இழுமெனும் இனிய ஒலியோடு."

மலர்களையும், முத்துக்களையும், பொற் கட்டிகளையும் ஏந்திக் கொண்டு வரும் அருவியின் கோலத்தைக் காண்பதை விட்டுப் போகவும் மனமில்லாமல், கிட்ட வரவும் துணிவில்லாமல் தொலைவி லிருந்தபடியே கண்டு களிக்கின்றன அவ் விலங்குகளும் பறவைகளும். செல்வமும், அழகும் படைத்த அந்த அருவிக்கு என்ன குறைவு? விலங்குகளுக்கும், பறவைகளுக்குந்தான் என்ன குறைவு? ஆசிரியர் கூறுகிறபடி "இயற்கை அழகை உற்று நோக்கி இன்புறும் எவருக்குத்தான் என்ன குறை இருக்கப் போகின்றது?

(வரும்)

## திருவருள் வேட்டல்

பருவமழை தவறாது பொழிய வேண்டும்
பலபயிர்கள் வளமாக விளைய வேண்டும்
ஒருமையுடன் பலவுயிரும் உண்டு மக்கள்
உடுத்துறையுள் பல்லாண்டு வாழ வேண்டும்

தருமமுதல் அறங்கலைகள் ஓங்க வேண்டும்
தாழ்வுதரும் பகைபிணிகள் நீங்க வேண்டும்
திருவருளா லன்றியிவை இல்லை யென்று
திருமாலே! நிற்பணிந்தோம் அருளு வாயே

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்[illegible] [illegible] [illegible]பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)